**கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பராயம்**

கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்கு போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள எனக்கு இயலாதுள்ளது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியத்தின் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையான நிதிக்கூற்றுத் தொகுதியில் உள்ளடக்கப்பட வேண்டிய உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடக்கப்பட்ட குறிப்புகளும் ஏனைய விபரமான குறிப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாது அட்டுறு அடிப்படை பின்பற்றப்படாது காசு | தேறிய சொத்துக்கள் தொடர்பிலான கூற்று நிதியத்தின் பாய்ச்சல் கூற்றுடன் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன். கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்திற்காக காசு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு முதல் கணக்குகளைத் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதியத்தின் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களிற்கு உரித்தான பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டு அதற்கமைவாக நிதிக் கூற்றுத் தொகுதி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் வருமானச் செலவினக் கணக்கும் ஐந்தொகையும் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பணம் விதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வருமானம் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிராததுடன் செலுத்தப்பட வேண்டிய வெகுமதி நிதியம் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய சந்தர்ப்பத்தின் போதும் இது இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வருமானச் செலவினமாக முறையே ரூபா 2,016,922 தொகையும் ரூபா 1,353,000 தொகையும் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் குறித்த தகவல்களைச் சேகரித்து பராமரிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பேன். | நியமத்தின் பிரகாரம் கணக்காண்டிற்கு உரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானமும் வெகுமதிப் பணச் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெகுமதி நிதியத்திற்கு 2014 முதல் மீளாய்வாண்டு வரை செலவு வைக்கப்பட்டிருந்த தண்டப்பணத்தில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வெகுமதிக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,878,616 தொகை செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இது செலுத்தப்பட வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நீதிமன்றம் தண்டப்பணத்தை விதிக்கையில் அதனை சரியாக இனங்கண்டு பெறவேண்டிய வருமானமாகவும், செலுத்தப்படாத வெகுமதி நிதி செலுத்தப்பட | கணக்காய்வு அவதானிப்பின் படி வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்களும் அறிக்கைகளும் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வேண்டிய நிதியாகவும் கணக்குகளில் காண்பிக்கக்கூடிய வகையில் சொந்த வருமான, செலவின, சொத்துக்கள் மற்றும் பொறுப்பு தொடர்பான புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 மே 09 ஆம் திகதிய 2018/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் 64 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 49 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 31 (ஊ) பிரிவின் படி, ஸ்தாபிக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்தின் வெகுமதி செலுத்தப்படும் வழிகாட்டல் மற்றும் நடைமுறை விதி | | | |
| (i) | 1 ஆவது வழிகாட்டல் | வெகுமதி நிதியத்திற்கு 2014 முதல் 2023 ஆம் ஆண்டு வரை செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 15,231,732 தொகையான தண்டப்பணத்தில் வெகுமதிக்காக ரூபா 7,615,866 செலுத்தப்பட | வெகுமதி வழங்கப்படுவதற்காக பொலிஸ் நிலையங்களிடம் இருந்து உத்தியோகத்தர்களின் தகவல்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு தகவல்கள் | பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு செலுத்த வேண்டிய வெகுமதித் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய தொகையான போதிலும் இதில் ரூபா 2,878,616 தொகையைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த வழக்குத் தொடர்பான விபரங்களும் செலுத்த வேண்டிய பணத்தொகையின் அளவு தொடர்பான விபரங்களும் கிடைக்கப்பெற்றிராமை இதற்கான காரணமானது. | அனுப்பிவைக்கப்பட்டிராத வெகுமதியைச் செலுத்துவதற்கு இயலாதுள்ளது. இந்த ரூபா 2.8 மில்லியன் தொகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் செலுத்த வேண்டிய வெகுமதித் தொகை மாத்திரம் உள்ளடங்கியுள்ளது. | தொகை தாதமின்றி செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 3(iii) ஆம் பந்தி | வெகுமதி செலுத்தப்பட முன்னர் அதற்கு உரிய உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து பெறப்படும் தகவலை அடிப்படையாகக் கொண்டு வெகுமதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வெகுமதிக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் கையொப்பமிடப்பட்டு அனுப்பியதை அடுத்து உறுதிப்படுத்துவதற்காக எனக்கு அனுப்பிவைக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட உறுதிச்சான்றுகள் கொடுப்பனவிற்கு உரித்தான உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலுடன் கணக்குப் பிரிவில் கோவையிடப்பட்டுள்ளன. | வழிகாட்டல் மற்றும் நடைமுறை விதியின் படி. வெகுமதி செலுத்தப்பட முன்னர் அதற்கு உரிய உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவப் பணிப்பாளரும் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 5(i) ஆம் பந்தி | வெகுமதிக்கான கொடுப்பனவு அரையாண்டிற்கொருமுறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,353,000 தொகையான வெகுமதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்கான காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தகவல்கள் நீதிமன்றங்களில் இருந்தும் பொலிஸ் நிலையங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.கரையோரப் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் படி, நீதிமன்றங்களில் நடாத்தப்படும் வழக்குகள் தொடர்பாகவும் அவ் வழக்குகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர் | வழக்குகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்களைச் சேகரித்துப் பேணி அதிகாரச்சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பிலான தகவல்களும் சேகரிக்கப்பட்டு பேணப்படுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | 20202 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) மற்றும் (உ) பந்தி | கணக்காண்டு முடிவுற்று 2 மாதங்களிற்குள் நிதியம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அரச நிதித் திணைக்களத்திற்கு ஓர் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் ஆரம்பத்தில் இருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை 2024.04.02 ஆம் திகதி அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பதுடன் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி. வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு குறித்த பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 337,081 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இ பற்றாக்குறை ரூபா 346,095 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 9,014 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நீதிமன்றங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தண்டப்பணத்தில் வெகுமதி செலுத்தப்பட்ட சதவீதம் 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 பொலிஸ் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களின் படி, 2014 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நீதிமன்றங்களில் இருந்து பெறவேண்டிய ரூபா 10,062,500 தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் ஊக்குவிப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய வெகுமதித் தொகையான ரூபா 5,031,250 உம் திரண்ட நிதியத்திற்குச் செலவு | பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் குறித்த நீதிமன்றங்களில் இருந்து பணம் அனுப்பிவைக்கப்பட்டிராத சந்தர்ப்பங்களின் போது அத் தொகையை அனுப்பிவைக்குமாறு நீதிமன்றங்களுக்கு சட்டப் பிரிவால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களால், தண்டப்பணம் மாகாண | நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்துடன் தகவல் பரிமாற்றப்படுவதற்கு முறையான நடைமுறை ஒன்று தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட வேண்டிய 40 சதவீதமான ரூபா 4,025,000 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செலவு வைக்கப்பட இயலாதிருந்தது. | சபைகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவை மீளப் பெறப்பட்டு எமக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. சம்மாந்துறை நீதிமன்றத்தால் பகுதியளவில் செலுத்தப்பட வேண்டிய தண்டப்பணத் தொகையில் ஒரு பகுதி இத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய பகுதியாக அனுப்பிவைக்கப்பட வேண்டிய தொகை அனுப்பிவைக்கப்படாததை அடுத்து தண்டப்பணம் முழுமையாகும் வரை கொடுப்பனவை மேற்கொள்ள இயலாதுள்ளது. சம்மாந்துறை நீதிமன்றத்தாலும் குறித்த பணம் மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவை மீளப் பெறப்பட்டு இத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | வெகுமதி நிதியத்தால் பேணப்பட்டு வரும் வங்கி நடைமுறைக் கணக்கின் படி, 2016 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிதியத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எஞ்சியிருந்த காசு மீதி ரூபா 2.8 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. | 2023.12.31 திகதியில் உள்ளவாறான வெகுமதி நிதியத்தின் மீதியான ரூபா 2.8 மில்லியன் தொகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் செலுத்த வேண்டிய வெகுமதிப் பணம் மாத்திரமாகும். | பொலிஸ் திணைக்களத்துடன் கலந்துரையாடி செலுத்த வேண்டிய வெகுமதி நிதியத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்ட தண்டப்பணம் தொடர்பாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளால் அனுப்பிவைக்கப்பட்ட வெகுமதி நிதியம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடுகளில் | கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியக் கொடுப்பனவிற்காகப் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப் பதிவேட்டிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தகவல் | பதிவேடுகளில் சரியான தகவல் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படுவதற்கும், கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பெறுவனவுக் கொடுப்பனவுகளுடன் இணங்கியிராமை, பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிராமை, கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் பொது வைப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிராமை போன்ற குறைபாடுகள் காரணமாக பெறுவனவுக் கொடுப்பனவுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. | உள்ளடக்கப்பட்ட பதிவேட்டிலும் பதிவு செய்யப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | பொது வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுவதற்கும், பொது வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் பெறுவனவுக் கொடுப்பனவுப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பெறுவனவுக் கொடுப்பனவுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | குற்றவாளிகளிடம் இருந்து நீதிமன்றத்தால் அறவிடப்படும் சகல தண்டப்பணமும் நிதியத்திற்கு அறவிடப்படுவதற்கும், அவ்வாறு நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் பணத்தொகை உரிய தரப்பினருக்கு வெகுமதியாக ஒதுக்கப்பட்டு வழங்கப்படுவதற்கும் நீதவான் நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்திற்கு இடையே தகவல் பரிமாற்றப்படுவதற்கு முறையான நடைமுறை ஒன்று இருக்கவில்லை. இதன் காரணமாக நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட வேண்டிய தண்டப்பணம் மற்றும் வெகுமதியை வழங்க வேண்டிய நபர்களை எளிதாகவும் விரைவாகவும் இனங்கண்டு குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய 40 சதவீதமான தண்டப்பணம் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்படுவதற்கு இயலாது போனமையும் அவதானிக்கப்பட்டது. | பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் உரிய நீதிமன்றங்களில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களால் அவை மாகாண சபைகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவை மீளப் பெறப்பட்டு எமக்கு அனுப்பிவைப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தியானதை உடனடுத்து நீதிமன்றத்தால் தண்டப்பணம் பெறப்பட்டு தாமதமின்றி தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு இடையே முறையான தகவல் பரிமாற்றம் செய்யப்படுவதற்கான ஓர் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும். |